*சீனா*

# இலஞ்சம் வாங்கிய அதிகாரிக்கு மரண தண்டனை

ஊழல் வழக்கில் சிக்கிய சீன அதிகாரிக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை மேல்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. நீதித் துறை அதிகாரியான வென் கியாங், தென்மேற்கு சீனாவில் உள்ள நகராட்சியில் பணிபுரிந்தபோது ஊழல் வழக்கில் சிக்கினார். இவர் மீது தொடரப்பட்ட வழக்கில் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் 14ம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து இவர் தாக்கல் செய்த கருணை மனுவை மேல் முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்து, இவருக்கு வழங்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றுமாறு கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது. இந்த தண்டனை நிறைவேற்றம் தொடர்பான உத்தரவு உச்ச நீதிமன்றத்தின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டு பின்னர் நிறைவேற்றப்படும். ஊழல் வழக்கில் மரண தண்டனை பெறும் இரண்டாவது சீன அதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

55 வயதான வென், சோங்கிங் நகராட்சியில் 1992ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டு வரை துணை இயக்குநராகவும் பின்னர் நீதித்துறை இயக்குநராகவும் பணியாற்றினார். ஊழல் வழக்கில் இவர் 2009ம் ஆண்டு செப்டம்பரில் கைது செய்யப்பட்டார். மொத்தம் 90 உள்ளாட்சி அதிகாரிகள் மீது வழக்கு தொடரப்பட்டதில் 42 பேர் மீதான குற்றம் நிரூபணமானது. 1996ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரையான காலத்தில் 17 இலட்சம் டொலர் இலஞ்சம் வாங்கியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இவை அனைத்தும் இவரது மனைவி பெயரில் வாங்கப்பட்டுள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐந்து பிரதான குற்றங்களைச் செய்த குற்றவாளிகளுக்கு துணை போவதற்காக இவர் இலஞ்சம் பெற்றதும் நிரூபிக்கப்பட்டது. இது தவிர, நகராட்சியில் பதவிகள் வழங்கியது மற்றும் நிறுவனங்களுக்கு சலுகை காட்டி அதன் மூலம் முறைகேடாக இலஞ்சம் பெற்றதும் தெரியவந்தது. 2007ம் ஆண்டு பல்கலைக்கழக மாணவியை மானபங்கம் செய்ததும் விசாரணையில் தெரியவந்தது. இந்த வழக்கு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு பேரின் தண்டனையையும் மேல் முறையீட்டு ஆணையம் உறுதி செய்தது. இதில் வென் மனைவி சோஹூ ஜியாவும் அடங்குவார். இவரது நண்பர்கள் ஹுயாங்கிற்கு 20 ஆண்டும், சென்னுக்கு 19 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. வியாழக்கிழமை தான் சீன வர்த்தக அமைச்சகத்தில் உள்ள உயர் அதிகாரி குயோ ஜிங்குயி-க்கு இலஞ்சம் பெற்ற வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

*ஒஸ்ரியா*

# உலகில் சிறந்த நகரம்

உலகில் 2010ம் ஆண்டுக்கான சிறந்த வாழ்க்கைத் தரமுடைய முதனிலை நகரமாக ஒஸ்ரிய நாட்டின் வியன்னா தெரிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் மூன்றாம் நிலைகளை சுவிற்சர்லாந்தின் சூரிச் மற்றும் ஜெனீவா ஆகிய இரு நகரங்களும் பெற்றுள்ளன. அத்துடன், சுவிஸ்லாந்து பேர்ண் நகரம் உலகின் மிகச் சிறந்த வாழ்க்கைத் தரமுடைய பத்து நகரங்களில் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தலைநகர் பேர்ண் சிறந்த வாழ்க்கைத் தரமுடைய நாடுகளின் வரிசையில் ஒன்பதாம் நிலை வகிக்கின்றது. உலகின் 221 நாடுகளில் சிறந்த வாழ்க்கைத்தரம் மற்றும் ஆபத்தான நகரங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை உலகில் மிகவும் ஆபத்தான நகரமாக ஈராக்கின் பக்தாத் நகரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



*அமெரிக்கா*

# டிவிட்டர், பேஸ்புக் பயனுள்ள இராஜதந்திர கருவிகள்

டிவிட்டர், பேஸ்புக் ஆகியன மின் ஆளுமைக்கு உதவும் பயனுள்ள கருவிகள் மட்டுமின்றி, அவைகள் இராஜதந்திர உறவுகளை வளர்ப்பதற்கும் பயன்படுகின்றன என்று அமெரிக்கா கூறியுள்ளது. இதுகுறித்து அமெரிக்க அயலுறவு அமைச்சக பேச்சாளர் பி.ஜே. கிராவ்லி கூறியதாவது, 21வது நூற்றாண்டு இராஜதந்திரம் என்பது பல்வேறு திறன்களின் பிணைப்புகளாக உள்ளது. ஒரு பக்கத்தில் அமெரிக்கச் செயலர்கள் உலகம் முழுவதும் பயணம் செய்து நேருக்கு நேர் பேசி வருகின்றனர். அதே நேரத்தில் உலக மக்களுடனும் தகவல்களை பரிமாறிக் கொள்ள முடிகிறது. அதற்கு டிவிட்டர், ஃபேஸ்புக், ஃபிலிக்கர் ஆகியன பயன்படுகின்றன? டிவிட்டரில் தனக்கு 2,000 தொடர்பாளர்கள் உள்ளதாக கிராவ்லி கூறியுள்ளார்.

*ஈரான்*

# ரஷ்யாவின் பொருளாதாரத்தடை ஆதரவுக்கு கண்டனம்

அணு ஆராய்ச்சியில் ஈரான் ஈடுபட்டு வருவதற்கு ரஷ்யா உதவி செய்து வந்தது. இந்நிலையில் ஈரானின் இந்த ஆராய்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த அமெரிக்காவையும், ஐரோப்பிய நாடுகளையும் சமாதானம் செய்யும் வகையில், யுரேனியத்தை செறிவூட்டும் பணியை வெளிநாட்டில் ஒப்படைப்பது என்ற திட்டத்தை ஈரான் அறிவித்தது. இதை அந்த நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அணு ஆயுத ஆராய்ச்சியை கைவிடும்படி அந்த நாடுகள் கேட்டுக்கொண்டன. அப்படி கைவிடாவிட்டால், ஈரான் மீது பொருளாதார தடை விதிப்போம் என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அறிவித்தன. அமெரிக்காவின் இந்த முயற்சிக்கு ரஷ்யா ஆதரவு அளித்துள்ளது. இதற்கு ஈரான் கண்டனம் தெரிவித்துள்ளது. ஈரான் மீதான ஐ.நா. நடவடிக்கைக்கு ரஷ்யா ஆதரவு அளித்து இருப்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எங்களுக்கு எதிரான அமெரிக்காவுக்கு எங்கள் அண்டை நாடான ரஷ்யா ஆதரவு அளிப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என்று ஈரான் அதிபர் அகமதிநிஜாத் கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

*தாய்லாந்து*

# முன்னாள் பிரதமரை கைது செய்ய உத்தரவு

தாய்லாந்து நாட்டில் கடந்த 2 மாதங்களாக தீவிரவாதத்தை தூண்டிவிட்டதாகவும், அதன் மூலம் 88 பேர் பலியாக காரணமாக இருந்ததாகவும் முன்னாள் பிரதமர் தக்சின் ஷினாவத்ரா மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தலைமறைவாக இருக்கும் அவரை கைது செய்ய கைது உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.



தாய்லாந்து நாட்டில் தக்சின் ஷினாவத்ரா பிரதமராக இருந்தார். 2006ம் ஆண்டு நடந்த இராணுவ புரட்சியில் அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதன்பிறகு அவர் வெளிநாட்டுக்கு தப்பி ஓடி தலைமறைவாகி விட்டார். இதன்பிறகு அபிசித் வெஜ்ஜா ஜீவா பிரதமர் ஆனார். அபிசித் உடனடியாக பதவி விலக வேண்டும் என்றும், தேர்தலை நடத்த வேண்டும் என்றும் கோரி போராட்டம் நடத்தும்படி தக்சின் ஷினாவத்ரா தன் ஆதரவாளர்களை தூண்டிவிட்டார் என்று அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த 2 மாதகாலமாக தக்சின் ஆதரவாளர்கள் பாங்கொக் நகரின் மையப்பகுதியில் முற்றுகையிட்டு நகரத்தை நிலைகுலைய செய்தனர். இதனால் அவர் மீது தீவிரவாதத்தை தூண்டிவிட்டதாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. அவரது ஆதரவாளர்கள் ஈடுபட்ட கலவரத்தில் 88 பேர் பலியானார்கள். 88 பேர் உயிரிழப்புக்கும் தக்சின் தான் காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடந்தது. அப்போது தக்சின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் இந்த குற்றச்சாட்டை மறுத்தார். 2 மாத காலமாக நடந்த போராட்டத்தில் தக்சினுக்கு எந்த பங்கும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.



தக்சின் மீதான இத்தகைய குற்றச்சாட்டால் சமரசம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் கொள்ளி வைக்கப்பட்டுள்ளது என்று வாதாடினார். அவர் மேலும் கூறுகையில், இந்த போராட்டத்துக்கு அவர் பணம் எதுவும் செலவிடவில்லை. போராட்டம் அமைதியாக தான் தொடங்கியது. தக்சின் வீடியோ மூலம் தினமும் உரையாற்றினார். போராட்டக்காரர்களின் நோக்கத்துக்கு அவர் ஆதரவு அளித்தார் என்று குறிப்பிட்டார். வழக்கு விசாரணை தள்ளி வைக்கப்பட்டது. அதற்கு முன்னதாக தக்சினை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.